ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
අති විශෙෂ அதிவிசேஷமானது
අංක 2323/44 – 2023 මාර්තු මස 17 වැනි සිකුරාදා – 2023.03.17
*2323/44 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 17 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) – பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### அரசாங்க அறிவித்தல்கள்

*2010 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க குடியியல் வான்செலவுச் சட்டம்*

இவ் அறிவித்தலானது குடியியல் வான்செலவுப் பணிப்பாளர் நாயகத்தினால் 2010 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்கம் கொண்ட குடியியல் வான்செலவுச் சட்டத்தின்23 ஆவது வாசகத்தில் 4 ஆவது உப பிரிவின் மூலம் அவருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய விடுக்கப்பட்டுள்ளது.

**பி. ஏ. ஜெயக்காந்த,**
குடியியல் வான்செலவுப் பணிப்பாளர் நாயகம்

கட்டுநாயக்க,
*2023, மாச்சு 10.*

### அறிவுறுத்தல்கள்

மட்டக்களப்பு விமான நிலைய பாதுாப்பு பிரதேசத்துக்குள்ளே கட்டிடங்கள், கோபுரங்கள் அல்லது வேறுகட்டுமானப் பணிகளை மேற்கொள்ளுதல் அல்லது நடைமுறையிலுள்ள கட்டிடங்கள், கோபுரங்கள் அல்லது ஏதேனும் கட்டுமானப் பணிகளின் மாற்றங்களினை ஏற்படுத்துதல் அல்லது மட்டக்களப்பு விமான நிலையத்திற்கு சூழ மற்றும் அதனும் தொடர்புடைய வான் வழியில் வான் பயணங்களை தொழிற்படுத்துவதில் தாக்கம் விளைவிக்கும் வகையில் அமைந்துள்ள பருப்பொருளில் ஒளியேற்படுத்துதல், குறியிடுதல் மற்றும் அடையாளங்காணல் அல்லது தொடர்பாக நிறைவேற்றப்படவேணடிய தேவைப்பாடுகளை பின்வருமாறு குறிப்பிடுதல் வேண்டும்

1A – PG6259 – 26 (2023/03)

*இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**பகுதி** I - பொது

தகுதியுரை மற்றும் பொருத்தப்பாடு

1. இந்த அறிவுறுத்தல்கள் " 2023 ஆம் ஆண்டு I ஆம் இலக்க மட்டக்களப்பு விமான நிலைய வலயப்படுத்தலின் அறிவுத்தல்கள்" என்றவாறு குறிப்பிடப்படுவதுடன், குடியியல் வான்செலவுப் பணிப்பாளர் நாயகத்தினால் எழுத்தினால் லிடுவிக்கப்படுமானாலொழிய மட்டக்களப்பு விமான நிலையத்திற்கு இயைபுடையதாகும்.

மற்றும்

செல்லுபடியாகும் திகதி

2. இந்த அறிவுறுத்தல்கள் உடனடியாக நடைமுறையில் உள்ளவாறு அமுல்படுத்தப்படும்.

பொருள் விளக்கம்

3. இந்த அறிவுறுத்தல்களின் சொற்கள் தொடர்பாக சூழமைவு தேவைப்படுமானாலொழிய,

" சட்டம்" என்று 2010 ஆம் ஆண்டு 14 ஆம் இலக்க குடியியல் வான்செலவுச் சட்டம் கருதப்படும்;

"பாதுகாப்பு பிரதேசம்" எனக் கருதப்படுவது 2010 ஆம் ஆண்டு 14 ஆம் இலக்க குடியியல் வான்செலவுச் சட்டத்தின் 23 ஆவது பிரிவின் உபபிரிவு 1(அ) கீழ் அமைச்சரினால் அமுல்படுத்தியுள்ள மட்டக்களப்பு விமான நிலையம், 2020 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க சட்டத்தில் விவரிக்கப்பட்டுள்ளவாறு நிர்ணயிக்கப்பட்டுள்ள பாதுகாப்புப் பிரதேசம் ஆகும்;

" விமானத்தளம்" என குறிப்பிடப்படுவது, விமானங்களின் வருகை, புறப்பாடு மற்றும் மேற்பரப்பில் பயணம் செய்யும் நோக்கில் முழுமையாக அல்லது பகுதியாக, ஈடுபடுத்திக் கொள்ளப்படும் நிலப்பரப்பிலமைந்துள்ள குறிப்பிட்ட நிலப்பரப்பளவிலுள்ள ஏதேனும் கட்டிடமொன்று, பொருத்துதல் மற்றும் உபகரணம் உள்ளடங்களாக கருதப்படும்;

"விமானத்தள ஏற்றம்" என குறிப்பிடப்படுவது, விமானமொன்று தரையிறங்குவதற்காக பயன்படுத்திக் கொள்ளும் பிரதேசத்தில் உயர் புள்ளியில், இடைநிலை கடல் மட்டத்திலும் பார்க்க உயர்வாகும்;

"விமானத்தள குறிப்பு புள்ளி" என குறிப்பிடப்பவது, வானூர்தி தளத்தில், நிர்ணயிக்கப்பட்ட புவியியல் அமைவிடத்தை குறிப்பிடுகிறது;

" ஓடுபாதை" என குறிப்பிடப்படுவது, விமானமொன்று தரையிறங்குவதற்கும், விமானமொன்று புறப்படுவதற்கும் தரைப்பிரதேசமாக விமானத் தளத்தினூடாக தயாரிக்கப்பட்டிருக்கின்ற குறிப்பிட்ட செவ்வக வடிவிலாக பகுதியாகும்;

" கருவியுடனான ஓடுபாதை" என குறிப்பிடப்படுவது, குடியியல் வான்செலவுப் பணிப்பாளர் நாயகத்தினால் வான் உத்தரவாதத்தினை அறிவுறுத்தும் தொழிற்படுத்து நியமங்கள் 30 " இலங்கை வானூர்தி தரங்கள்" மூலம் கருவியுடனான ஓடுபாதையாக இந்த கட்டளைகளின் தொழிற்பாடுகளுக்காக குறிப்பிடுகின்ற ஓடுபாதையாகும;

" கருவிகொண்டிராக ஓடுபாதை" என குறிப்பிடப்படுவது, கருவியுடனான ஓடுபாதையல்லாத ஓடுபாதையாகும்:

" தரையிறங்கும் பிரதேசம்" என குறிப்பிடப்படுவது, விமானமொன்று தரையிறங்குவதற்கு அல்லது விமானமொன்று தரையிறங்குவதற்கு அல்லது விமானமொன்று புறப்படுவதற்கு கருதும் வானூர்தித் தளத்தில், விமானங்களை கையாளும் பிரதேசத்தில் அமைந்துள்ள குறித்த பகுதியாகும்:

" வான் தடங்கல்" என குறிப்பிடப்படுவது,

(அ) விமான மேற்பரப்பில் பயணம் செய்வதற்காக கருதும் பகுதியில் அமைந்துள்ளதும் அல்லது:

(ஆ) விமானமொன்றினது பறத்திலின் பாதுகாப்பிற்காக அமைக்கப்பட்ட வரையறுக்கப்பட்ட மேற்பரப்பினை நீடிக்கப்பட்டதும் அல்லது:

(இ) வரையறுத்த மேற்பரப்புக்களுக்கு வெளியே அமைந்துள்ள மற்றும் வான் அகல்வெளிச் செலவுகளின் இடையூறுகளாக கணிப்பிடத்தக்க அல்லது: தகுதியுரை

அனைத்து தற்காலிகமாகவுள்ள அல்லது நிரந்தரமாகவுள்ள நிலையான சொத்துக்கள் அல்லது அசையக்கூடிய சொத்துக்கள் அல்லது அதன் பகுதியாக கருதப்படும்:

“ அணுகுமுறைப் பகுதி” என்று குறிப்பிடுவது,

(அ) ஓடுபாதையின் ஒவ்வொரு முனையிலிருந்து தரையிறங்கும் திசைக்கு கிடைநிலையாக 60 மீற்றர் தூரத்தில் ஓடுபாதையில் நீடிக்கப்பட்ட மைய கோட்டுக்கு செவ்வொழுங்காக மற்றும் செங்குத்துக் கோட்டில் அமைந்துள்ள 280 மீற்றர் அகலத்தைக்கொண்ட அகச் சார்பான விளிம்பினாலும்:

(ஆ) ஓடுபாதையின் அகச் சார்பு விளிம்பின் முனைகளிலிருந்து தொடங்கி ஓடுபாதையின் நீட்டப்பட்ட மைய கோட்டிற்கு அருகில் ஒரே மாதிரியாக விலகிச் செல்லும் அகலம் 4780 மீற்றர் ஆகுமாறு அகச் சார்ப்பு விளிம்பிலிருந்து 15000 மீற்றர் தூரத்தில் கிடை நிலை தூரத்திற்கு தோற்றுவிக்கின்ற இரு பக்கங்களினாலும்:

(இ) அகச்சார்பு விளிம்பிலிருந்து 15000 மீற்றர் தூரத்தில் அதற்கு சமாந்தரமாக மற்றும் 4780 மீற்றர் அகலமுள்ள வெளிப்புற விளிம்பினால் உள்ளடக்கப்படுவதுமான:

வெளிநோக்கிய எல்லைகளினாலான பிரதேசமாக கருதப்படும்

“ அணுகுமுறை மேற்பரப்பு” என்று குறிப்பிடுவது ஓடுபாதையின் உள்ளே எல்லையின் மைய புள்ளியில் உயர் மட்டத்திற்கு சமனான உயர்த்தில் பிந்தையவரின் அகச் சார்பு விளிம்பிலிருந்து தொடங்கி தரையிறங்கும் திசையிற்கு அப்பால் விரிவடைகின்ற:

(அ) 50: 1 என்ற நிலைக்குத்துச் சாய்வுடன் 3000 மீற்றர் பக்கவாட்டு தூரம் வரை, மற்றும்,

(ஆ) 40: 1 என்ற நிலைக்குத்துச் சாய்வுடன் 3600 மீற்றர் பக்கவாட்டு தூரம் வரை, மற்றும்,

(இ) அணுகுமுறைப் பிரதேசத்தின் புற விளிம்பை உள்ளடக்கிய செங்குத்துத் தளத்தினால் முடிவடைகின்றதும், கிடைத் தளத்துடனான,

ஒரு சாய்ந்த தளம் அல்லது அணுகுமுறை பிரதேசத்தில் எல்லைகளினால் பக்கவாட்டில் வரையறுக் கப்பட்ட தளங்களின் தொகுதியாகும்.

“ இடைமாறுபாட்டு பிரதேச” என்று, தனித்தனி அணுகுமுறைப் பிரதேசத்தின் அகச்சார்பு விளிம்பின் முனையத்திலிருந்து தொடங்கி ஓடுபாதையின் மையக் கோட்டிற்கு சமாந்தரமாக தரையிறங்கும் திசயை நோக்கி வரைந்துள்ள கோட்டிலிருந்து தொடங்கி, ஓடுபாதையின் மைய கோட்டிலிருந்து கிடைநிலையாக 455 மீற்றர் தூரத்தில் மற்றும் ஓடு பாதையின் மைய கோட்டிற்கு சமாந்தரமாக அமைந்துள்ளதுமான கோட்டினால் முடிவடைகின்றதும், வெளிநோக்கிய அணுகுமுறை பிரதேசத்தினை சந்திக்கின்றதுமான பிரதேசமாக கருதப்படும்:

“ இடைமாறுபாட்டு மேற்பரப்பு” என்று, தனித்தனி அணுகுறைப் பிரதேசத்தில் அகச்சார்பு விளிம்பின் முனையத்தலிருந்து தொடங்கி ஓடுபாதையின் மையக் கோட்டிற்கு சமாந்தரமாக தரையிறங்கும் திசைக்கு வரைந்துள்ள கோட்டினால் ஆரம்பிக்கப்படுவதும், அக்கோட்டிலிருந்து 7:1 நிலைக்குத்துச் சாய்வாக ஓடு பாதையின் அப்பால் விரிவடைகின்ற, விமானத்தளத்தின் ஏற்றத்திலும் மார்க்க 45 மீற்றர் உயரத்தில் முடிவடைகின்ற மற்றும் வெளிநோக்கியவாறான அணுகுமுறை மேற்பரப்பு சந்திக்கின்ற மேற்பரப்பாக கருதப்படும்:

“ உட்புற கிடைநிலைப் பகுதி” என குறிப்பிடப்படுவது, கருவியுடனான ஓடுபாதையின் இரு முனைகள் அதன் ஓடுபாதை மையப்புள்ளியுடன் இணைகின்ற வெட்டுப்புள்ளிகளை மையமாகக் கொண்டுள்ள ஒவ்வொரு வட்டத்திலும் அரை விட்டங்கள் 4, 000 மீற்றர் படியுள்ள இரு வட்டங்களின் உட்பகுதியில் அமைந்துள்ள பிரதேசம் மற்றும் அவற்றின் பொது தொடுகோடுகளின் உட்பகுதிகளில் அமைந்துள்ள பிரதேசமாகக் கருதப்படும்:

“ உட்புற கிடைநிலை மேற்பரப்பு” எனக்குறிப்பிடப்படுவது, விமானத்தளத்தின் ஏற்றத்திலும் பார்க்க 45 மீற்றர் உயரத்தில் அணுகுமுறை மேற்பரப்பு வெளிநோக்கிய விளிம்புகளினாலும், இடைமாறுபாட்டு மேற்பரப்பில் புற முனையத்திலிருந்து தொடங்கி உட்புற கிடைநிலைப் பகுதியில் புற எல்லைக்கோட்டின் செங்குத்துத் தளத்திலிருந்து முடிவடைகின்ற மேற்பரப்பு எனக் கருதப்படும்:

“ கூம்பு வடிவமான பிரதேசம்” எனக் குறிப்பிடப்படுவது, உட்புறமான கிடைநிலைப் பிரதேசத்தில் புறநிலை முனையத்திலிருந்து தொடங்கி 1, 500 மீற்றர் தூரத்திற்கு கிடைநிலையாக தோன்றுகின்ற பிரதேசமாகும்:

“ கூம்பு வடிவமான மேற்பரப்பு” எனக் குறிப்பிடப்படுவது, விமானத்தளத்தின் ஏற்றத்திலும் பார்க்க 45 மீற்றர் உயரத்தில் உட்புறமான கிடைநிலை மேற்பரப்பின் முனையத்திலிருந்து தொடங்கி 1, 500 மீற்றர் கிடைநிலை தூரத்திற்கு விமானத்தளத்தின் உயரத்திலும் பார்க்க 120 மீற்றர் நிலைக்குத்து தூரத்திற்கு தோற்றுகின்ற மேற்பரப்பாகும்:

“ புற கிடைநிலை பகுதி” எனக் குறிப்பிடப்படுவது, கூம்பு வடிவமான பிரதேசத்தின் புற முனையத்திலிருந்து தொடங்கி கூம்பு வடிவமான பிரதேசத்திலிருந்து அப்பால் ஆரைகளைப் போல் விரிவடைகின்ற, மட்டக்களப்பு விமான நிலைய பாதுகாப்பு பிரதேசத்தின் வெளி எல்லையிலிருந்து முடிவடைகின்ற பிரதேசமாகக் கருதப்படும்:

“ புற கிடைநிலை மேற்பரப்பு” எனக் குறிப்பிடப்படுவது, விமானத்தளத்தின் ஏற்றத்திலும் பார்க்க 120 மீற்றர் நிலைக்குத்து உயரத்தில் அமைந்துள்ள, கூம்பு வடிவமான பிரதேசத்தின் புற விளிம்பிலிருந்து அப்பால் விரிவடைகின்ற, மட்டக்களப்பு விமான நிலையப் பாதுகாப்பு பிரதேசத்தின் வெளி எல்லையிலிருந்து எல்லைப்படுத்தப்படுகின்ற செங்குத்து தளத்தில் முடிவடைகின்ற கிடைநிலைத் தளமாக கருதப்படும்:

உயர் எல்லைகள்

4\. (அ) 7 ஆவது அறிவுறுத்தலில் ஏற்படுத்தியுள்ள ஒழுங்குவிதிகளுக்கு ஏற்றவாறு அல்லாது, பின்வரும் பிரதேசத்தின் ஒத்த மேற்பரப்புகளுக்கு தெளிவாகத் தெரிகின்ற ஏதேனும் கட்டிடம், கோபுரம் அல்லது வேறு கட்டுமானமொன்றினை மேற்கொள்ளுதல் அல்லது நடைமுறையிலுள்ள கட்டிடங்கள், கோபுரங்கள் அல்லது ஏனும் கட்டுமானமொன்றின் மாற்றங்களினை மேற்கொள்ளுதல் அல்லது ஏதேனும் மரமொன்றினை வளர்ச்சியுறுவதற்கு அனுமதியளித்தல் கூடாது.

- (அ) அணுகுமுறைப் பகுதி
- (ஆ) இடைமாறுபாட்டு பகுதி
- (இ) உட்புற கிடைநிலைப்பகுதி
- (ஈ) கூம்புவடிவிலான மேற்பரப்பு
- (உ) புற கிடைநிலைப் பகுதி

(ஆ) 3 ஆவது அறிவுறுத்தலின் மூலம் விவரிக்கப்பட்ட பிரதேசத்தின் உயர் எல்லைகள் ஒறை விட அதிகமாகக் காணப்படும் சந்தர்ப்பங்களில் அவற்றிலிருந்து ஆகக் குறைந்தளவான உயர் எல்லைகளை நடைமுறைப்படுத்தல் வேண்டும்.

நில பயன்பாட்டு வரையறைகள்

5\. 3 ஆவது அறிவுறுத்தலின் பிரகாரம் விவரிக்கப்பட்ட ஏதேனும் பிரதேசத்தினுள்ளே அமைந்துள்ள நிலப் பிரதேசம், விமானத்தளம் மற்றும் விமானத்திற்கிடையே வானொலி தொலைத்தொடர்புகளின் போது ஏதேனும் தடங்கல் ஏற்படுமிடத்தில் அல்லது வான் தொழிற்பாட்டாளர்களுக்கு விமானத் தள

மின்சார விளக்குகளை ஏனைய விளக்குகளிலிருந்து வேறுபடுத்தி இனங்கண்டு கொள்வதற்கு தடங்கலாக இருக்கும் போதும், அல்லது விமானத்தளத்தினை உபயோகிக்கும் வான் தொழிற்பாட்டாளர்களின் கண்களை கூசுகின்ற ஏதேனும் விதத்தில் விமானத் தளத்தின் அருகில் ஒளிக்கு தடங்கலை ஏற்படுத்தும் போது அல்லது விமானம் தரையிறங்கும் போதும், விமானம் புறப்படும் போதும், தொழிற்படுத்தும் போதும் ஏதேனும் விதத்தில் ஆபத்து விளைவிக்கின்ற ஏதேனும் விதத்தினை பயன்பாட்டிற்கெடுத்தல் அல்லது செய்தல் கூடாது.

6. குடியியல் வான்செலவுப் பணிப்பாளர் நாயகத்தினால் வெளியிடப்படுகின்ற எழுத்தினாலான அனுமதிப்பத்திரத்தின் அதிகாரத்தின் பேரில் மற்றும் அங்கு குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளின் கீழ் அல்லாது, 3 ஆவது அறிவுறுத்தலில் குறிப்பிட்டுள்ள காணிகளை உபயோகித்தல் அல்லது அவ்விடத்தில் குறிப்பிட்டுள்ள ஏதேனும் பிரதேசத்தின் கட்டிடம், கோபுரம் அல்லது வேறு கட்டுமான பணிகளினை மேற்கொள்ளுதல் அல்லது நடைமுறையிலுள்ள கட்டிடங்கள், கோபுரங்கள் அல்லது ஏதேனும் கட்டுமான பணிகளின் மாற்றங்களினை மேற்கொள்ளுதல் அல்லது ஏதேனும் மரமொன்றினை வளர்ச்சியுறுவதற்கு அனுமதியளித்தல் அல்லது செய்தல் கூடாது: அனுமதிகள்

ஆயினும்,

(அ) இடைமாறுபாட்டு பிரதேசத்திற்கு அப்பால் அமைந்துள்ள பிரதேசத்தின் காணிகளை உபயோகிப்பதற்கு அல்லது ஏதேனும் கட்டிடம், கோபுரம் அல்லது வேறு கட்டுமான பணிகளினை மேற்கொள்ளுதல் அல்லது நடைமுறையிலுள்ள கட்டிடங்கள், கோபுரங்கள் அல்லது ஏதேனும் கட்டுமான பணிகளின் மாற்றங்களினை மேற்கொள்ளுதல் அல்லது ஏதேனும் மரமொன்றினை வளர்ச்சியுறுவதற்கு அனுமதியளித்தல் அல்லது மரமொன்றினை நாட்டுவதற்கு அல்லது அனுமதிப்பத்திரமொன்று விமானத்தளத்தின் ஏற்றத்திற்கு அப்பால் அக்கட்டிடத்தின், கோபுரத்தின் கட்டுமானத்தின் அல்லது மரத்தின் உயரம் 20 மீட்டருக்கு அதிகரிக்காத சந்தர்ப்பத்தில்:

(ஆ) கருவியுடனான அல்லது அவ்வாறில்லாத அணுகுமுறைப் பிரதேசத்தின் எல்லைகளுக்குள் ஆனாலும் ஓடுபாதையின் ஒவ்வொரு முனையத்திலிருந்து கிடைநிலையாக 1,800 மீற்றருக்கு குறையாத தூரத்தில் அமைந்துள்ள பிரதேசத்தின் காணிகளை உபயோகத்திற்கு அல்லது ஏதேனும் கட்டிம், கோபுரம் அல்லது வேறு கட்டுமான பணிகளினை மேற்கொள்ளுதல் அல்லது நடைமுறையிலுள்ள கட்டிடங்கள், கோபுரங்கள் அல்லது ஏதேனும் கட்டுமான பணிகளின் மாற்றங்களினை மேற்கொள்ளுதல் அல்லது ஏதேனும் மரமொன்றினை வளர்ச்சியுறுவதற்கு அனுமதியளித்தல் அல்லது மரமொன்றினை நாட்டுவதற்கு அல்லது அனுமதிப் பத்திரமொன்று விமானத்தளத்தின் ஏற்றத்திற்கு அப்பால் அக்கட்டிடத்தின், கோபுரத்தின் கட்டுமானத்தின் அல்லது மரத்தின் உயரம் 20 மீட்டருக்கு அதிகரிக்காத சந்தர்ப்பத்தில்:

அனுமதி பெறுகின்ற தேவையேற்படாது,

அனுமதிக்கான விண்ணப்பப் படிவம் www. caa.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும். பொருத்தமான கட்டணங்கள் குடியியல் வான்செலவு அதிகாரசபையின் கட்டண ஒழுங்குபடுத்தலில் குறிப்பிட்டவாறு அமையும். அனுமதிக்கான விண்ணப்பத்தில் அது எந்த நோக்கத்திற்காக தேவைப்படுகிறது என்பதை குறிப்பிட்டு குடியியல் வான்செலவுப் பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்புதல் வேண்டும். அனுமதி வழங்கல் மற்றும் அது வழங்கப்படும் நிபந்தனைகள் குடியியல் வான்செலவுப் பணிப்பாளர் நாயகததின் விருப்புரிமையின் பேரிலேயே தங்கியிருக்கும். கட்டிடம், கோபுரம் அல்லது அமைப்பு ஒன்றிற்கு வீட்டுவசதி மற்றும் நகர மேம்பாட்டுக் கட்டளையைப் பயன்படுத்தினால், குடியியல் வான்செலவுப் பணிப்பாளர் நாயகததின் அனுமதிக்கு மேலதிகமாக, மேற்குறிப்பிட்ட கட்டளையின் கீழுள்ள உள்ளூர் அதிகாரசபை ஒன்றின் அல்லது வேறு பொருத்தமான கட்டளை அல்லது கட்டளை அனுமதியொன்றைப் பெறுதல் வேண்டும்.

| | | |
|---|---|---|
| குறியிடுதல், அடையாளப் படுத்தல், மற்றும்/ அல்லது வான் தடங்கல்களுக்கான ஒளியமைப்புக்கள் | 7. | சிவில் விமான சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் இலங்கை வானூர்தித்தள தர நியமங்களின் தொழிற்படுத்து நியமங்கள் 30 இல் குறிக்கப்பட்ட தேவைப்பாடுகளுக்கு அமைவாக குறியிடுதல், ஒளியமைப்புக்கள் மற்றும் வான்தடங்கல்களை அடையாளங்காணுதல் என்பன செய்யப்படுதல் வேண்டும். |
| அனுப்புகை கோபுரம் மற்றும் காற்று விசையாழியில் காட்சிப்படுத்த வேணடிய தரவுகள் | 8. | சகல தகவல் அனுப்புகை கோபுரத்தின் அக்கோபுரம் சொந்தமான அல்லது காற்று விசையாழியின் அவ்விசையாழி சொந்தமான நபரின் அல்லது கம்பனியின் பெயர் மற்றும் கோபுரத்திற்கு அல்லது காற்று விசையாழியிற்கு பொறுப்பாகவுள்ள நபரின் தொலைபேசி இலக்கம் தெளிவாக தெரியும் வகையில் மஞ்சள் நிற பின்னணியிற்குள் கறுப்பு நிறத்தினால் குறப்பிடுதல் வேண்டும். |
| அனுமதிக் கப்படாத கட்டமைப்புக்களை அப்புறப்படுத்துவதற்கான அதிகாரம் | 9. | அனுமதியளிக்கப்படாத கட்டமைப்புக்களை அப்புறப்படுத்துவதற்கான அதிகாரம் 2010 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க குடியியல் வான்செலவுச் சட்டத்தின் 23 ஆவது பிரிவில் 5 ஆம் உட்பிரிவின் கீழ் காட்டப்பட்டுள்ளது. |

EOG 03 - 0212